[1979 ஏப்ரல் 7

நெடுவயல் கிராமத்தில் கதர் இலாகாக் கட்டிடம்.

*வினா எண் 659— திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென்காசித் தாலூகா நெடுவயல் கிராமத்தில் காதி இலாகாவுக்குச் சொந்தமான கட்டிடம் ஒன்று உபயோகம் இல்லாமல் கிடப்பதும் அதற்கு இரவு காவலர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் அதில் காதி இலாகாவிலிருந்து புது தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தென்காசி தாலூகா நெடுவயல் கிராமத்தில் தற்போது பயன்படுத்தப் படாமல் இருக்கும் கட்டிடம் மூடப்பட்ட கற்றாழை நார் பயிற்சி நிலையம் ஆகும். இது தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்திற்கு உரியதாகும்.

அக்கட்டிடத்தில் பயிற்சி நிலையத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தறிகள் வைக்கப்பட்டுள்ளன. ஆதலின் அதில் தற்சமயம் ஒரு இரவுக் காவலர் மட்டும் பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) இக்கட்டிடத்தில் கற்றாழை நார் தயாரிப்பு பயிற்சியினைத் தொடர்ந்து அளிப்பதற்கோ அல்லது வேறு மாற்றுத் தொழிலினை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளோ இல்லையென கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியமும், தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனமும் அறிவித்துள்ளன.

பயிற்சி நிலையக் கட்டிடத்தையும் அதன் சொத்துக்களையும் தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து, அரசு எடுத்துக்கொள்வது பற்றியும் அவைகளை பயன்படுத்துவது குறித்தும் தொழில் வணிக இயக்குநரோடு கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது அங்கே பொருள்களைப் பாதுகாப்பதற்காக ஒரு இரவு காவற்காரரை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிற்

1979 ஏப்ரல் 7]

சாலைக்குத் தேவையான கச்சா பொருள்கள் அதிகமாக அங்கே கிடைப்பதால், அங்கே அந்தத் தொழிற்சாலையை தொடங்குவதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே என் பதிலில் தெரிவித்திருக்கிறேன். அந்தப் பொருள்களைப் பயன்படுத்தி அரசு நடத்த முடியுமா என்பதைப் பற்றி தொழில் வணிக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவரது அறிக்கை வந்தவுடன் அந்தக் கட்டடத்தையும், பொருள்களையும் பயன்படுத்த அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். எம். ஏ. ரசாக்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற ஒரு உயர்நிலைப் பள்ளியைத் தொடங்குவதற்கு அங்கே இருக்கிற மாவட்ட கல்வி அதிகாரி இடமிருந்து அந்தக் கட்டடத்தைக் கேட்டு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தில் இருந்தால் அதை அவர்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்கோவில் சோமு மில்லுக்கு மின் சக்தி வழங்கல்.

*வினா எண் 66()—திரு கு. ரமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் நகரில் உள்ள சோமு மில்ஸ்க்கு மின் இணைப்பு கொடுத்த நாளிலிருந்து மீட்டர் ரீடிங் தவறாக கணக்கிட்டதால் மின்வாரியத்திற்கு சுமார் 60,000 ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்குப் பொறுப்பானவர்கள் யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) வசூலிக்காமல் விடப்பட்ட பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?